

Arimaa Nokku

# அரிமா நோக்கு

15: 1 ஏப்பிரல் 2021

ISSN 2320-4842

ஆசிரியர்: ஈரோடு தமிழன்பன்

மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, வரலாறு, மெய்யியல், அறிவியல்சார் பன்னாட்டுக் காலாண்டிதழ்

International Quarterly on Language, Literature, Art, Culture, History, Philosophy and Science

ISSN 2320-4842

அரிமா நோக்கு
15 : 1 ஏப்பிரல் 2021

கவிமுகிலின் காலச் சப்பரம்
- வ. ஜெயதேவன் 03
புறநானூற்றில் மகளிர் வாழ்வியல் அறம்
- சி. பத்மநாபன் 05
குறிஞ்சிக்கலி உணர்த்தும் நாடக உத்திகள்
- க. நர்மதா 10
Embodiment of Secular Perseverance in David Davida's *The Solitude of Emperos*: A Humanistic Study
- A. Umar Farook & A. Mohamed Mustafa 14
சிலம்பில் மருதநிலம்
- அ. ஜெயக்குமார் 18
தொல்காப்பியம் மற்றும் கீழ்க் கணக்கு அகநூல்களில் திருமணம்
- செ. ஜெயா 23
Vowel Production in Hearing Impaired Tamil Speaking Cochlear Implanted Children—A Software Analysis
- V. Jaya & Lalitha Raja 27
ஆறடி உணர்த்தும் வாழ்வியல் அறம்
- மு. கவிதாதேவி 33
பதிற்றுப்பத்து: சு. அருளம்பல வானரின் உரைத்திறன்
- பி. ஜீவா 40
இசுலாமிய அச்சுப் பண்பாட்டு வரலாறு: பிரபந்தங்கள் (1800-1900)
- கா. முரளி 43
கலித்தொகை: தை. ஆ. கனகசபாபதி முதலியாரின் உரைத்திறன்
- பி. ஜானகி 49
The "Animal" Game: Exploring the Man in Pellissery's *Jallikattu*
- Suhail Abdul Rub P 52
உரை வரலாறும் திருமூலர் திருமந்திரம் உரையாசிரியர் ச. தண்டபாணிதேசிகரும்
- ம. தனப்பிரியா 57

# தலைவாயில்

ஈரோடு தமிழன்பன்

## தமிழாய்வு எல்லைகள்

அண்மையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வெளியிட்ட மலருக்கு என்னிடம் ஒரு வாழ்த்துச் செய்தி கேட்டனர். நான் மகிழ்ச்சியோடு எழுதிக்கொடுத்தேன்.

சாகித்திய அகாதெமியை முதல் இந்தியத் தலைமை அமைச்சர் ஜவகர்லால் நேருவின் கனவு அமைப்பு என்று சொல்வார்கள். அதுபோலத்தான் **1968**இல் சென்னையில் நடைபெற்ற இரண்டா வது உலகத் தமிழ்மாநாட்டை ஒட்டி ஏற்படுத்தப்பட்ட உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தை அறிஞர் அண்ணாவின் வெற்றிக் கனவென்று சொல்லவேண்டும்.

தமிழ் வளத்தையும் பெருமையையும் உலகெல்லாம் கொண்டு செல்லவும் உலகின் எங்கெங்கு இருக்கும் இலக்கிய வளங்களை யும் இங்கே கொண்டுவரவும் இந்நிறுவனம் பயன்படவேண்டும் என்பதுதான் அறிஞர் அண்ணா கனவின் ஆக்க அதிகாரங்களாக அமைந்திருந்தன. மொழிசார்ந்தும் இலக்கியம் சார்ந்தும் உலகின் எந்த மூலையில் எந்த நூல் வெளியிடப்பட்டாலும் அவற்றை யெல்லாம் உடனுக்குடன் வாரிக்கொணர்ந்து மாபெரும் நூலகத் தில் சேர்க்கவேண்டும் என்றும் அவர் விரும்பினார். நிறுவனத் தின் ஆய்வு எல்லைக்குள் உலகத்தின் எப்பகுதியும் எம்மொழி யும் விடுபடாமல் இருக்க வேண்டும் என்பதும் நோக்கமாகக் கொண்டே உலகம் என்னும் அடைமொழி நிறுவனத்தோடு இணைக்கப்பட்டிருக்கவேண்டும்.

தமிழகத்தில் முதுகலைத் தமிழ் வகுப்புகள், முனைவர் பட்ட ஆய்வு வகுப்புகள் நடத்த எத்தனையோ கல்லூரிகள் உள்ளன. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனதிற்கு அவற்றினும் மேம்பட்ட நோக்கங்களும் செயற்பாடுகளும் உள்ளன. ஆய்வுத் தகுதிக்குப் பயிற்சி பெறுகிற இடமாக்க இருப்பதைக் காட்டிலும், தகுதி பெற்ற ஆய்வாளர்கள் பணியாற்றுகிற இடமாக இருப்பதல்லவா நிறுவ னத்தின் தகுதியாக இருக்க முடியும்?

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் ஐரோப்பா, அமெரிக்கா உள்ளிட்ட எத்தனை நாட்டு எத்தனை அறிஞர்கள் இப்போது ஆய்வுப் பணியில் ஈடுபட்டுள்ளனர்? ஜப்பானிய மொழியிலும் கொரிய மொழியிலும், நைஜீரிய மொழியிலும் தமிழ் அடையா ளங்கள் பலவாகக் காணப்படுவதாகச் சொல்கிறார்களே, உலகத் தின் முதல்மொழி தமிழ் என்று சொல்கிறோமே- இக்கருத்துகளை ஆய்ந்து முடிவு சொல்ல என்ன முயற்சிகளை மேற்கொண்டது உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்?

ISSN 2320-4842

எப்போதும் பத்து, இருபது அயல்நாட்டு அறிஞர்கள் தங்கி ஆய்வு நிகழ்த்துகிற இடமாக நிறுவனம் மாறவேண்டும்.

பெருந்தொகை திரட்டி அறக்கட்டளைகள் **(Foundations)** நிறுவி மொழிசார்ந்து பல துறைகளிலும் மேதைமை பெற்றவர்களை அழைத்து ஆய்வுத் திட்டங்களுக்கேற்பப் பயன்படுத்தலாம். அவர்களுக்கும் பொருட்பயன் கிடைக்க வாய்ப்புகள் கிடைக்கும்.

நிறைவாக, பிற முன்னேறிய நாடுகளில் மொழி ஆய்வுகள் எப்படித் திட்டமிடப்படுகின்றன எவ்வாறு செய்ப்படுகின்றன என்பதைக் கவனிக்கவும் கணிக்கவும் உரிய தொடர் முயற்சிகளைத் தொடங்கவேண்டும் என்பதைச் சுட்டிக்காட்ட இத்தலைவாயில் விரும்புகிறது. ◇

*ஆசிரியர்*
ஈரோடு தமிழன்பன்
❖
*இணையாசிரியர்*
வ. ஜெயதேவன்
❖
*ஆசிரியர் குழு*
நா. கணேசன் (அமெரிக்கா)
நா. சுப்பிரமணியன் (கனடா)
பொன். செல்வகணபதி
ஒப்பிலா மதிவாணன்
சீதா லட்சுமி (சிங்கப்பூர்)
மு. பரமசிவம் (மலேசியா)
பத்மாவதி விவேகானந்தன்
இரா. பிரேமா
பா. இரவிக்குமார்
மருதூர் அரங்கராசன்
பெ. இலக்குமிநாராயணன்
❖
*அறிவுரைக் குழு*
இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் உள்ள தமிழியல் அறிஞர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் படைப்பாளிகள்
❖
*பதிப்பாளர்*
இரா. பன்னிருகைவடிவேலன்
❖

# கட்டண விவரம்

| | | | |
|---|---|---|---|
| வாழ்நாள் கட்டணம் | ரூ. 3500/- | US | $ 150 |
| புரவலர் கட்டணம் | ரூ. 5000/- | US | $ 200 |
| பெரும்புரவலர் கட்டணம் | ரூ. 10,000/- | US | $ 500 |
| நிறுவனம்சார் உறுப்பினர் **(Institutional Membership)** | ரூ. 15,000/- | US | $ 700 |

### விளம்பரக் கட்டணம்

| | |
|---|---|
| பின்னட்டை (பல வண்ணங்கள்) | ரூ. 15,000/- |
| உள்ளட்டை (பல வண்ணங்கள்) | ரூ. 10,000/- |
| முழுப்பக்கம் (கருமை & வெண்மை) | ரூ. 3, 000/- |
| அரைப்பக்கம் (கருமை & வெண்மை) | ரூ. 1, 500/- |